# இல்லஸ்ட்ரேட்டர்

டெஸ்க் டாப் பப்ளிஷர் என்றழைக்கப்பட்ட கணினிகள் மூலமாக படங்கள் வரைவது, இலட்சிணைகள் உருவாக்குவது, சிறிய பல வண்ண பதிப்பக வேலைகளைச் செய்வது போன்ற பல்வேறு செயல்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளதே இல்லஸ்ட்ரேட்டர் என்ற மென்பொருளாகும்.

வெக்டார் வகை படங்களை எளிமையாகவும் விரைவாகவும் துல்லியமாகவும் உருவாக்க முடிவதே இந்த மென்பொருளின் சிறப்பாகும். அத்துடன் இதில் உருவாக்கப்பட்ட வடிவமைப்பை பல வண்ண அச்சுப் பிரதியாக பெறும்போது, அதில் உள்ள நிற அமைப்பிற்கும், கணினி திரையில் பார்த்த நிற அமைப்பிற்கும் அதிக வேறுபாடு இருப்பது இல்லை. இதனால் நடைமுறையில் நிறத் தொல்லை ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.

இந்த மென்பொருளில் கொடுக்கப்பட்டுள்ள எளிமையான கருவிகளால் படங்கள் வரைவது என்பது மிகவும் எளிமையாக உள்ளது. மேலும் துவக்கத்தில் இருந்த ஒரே ஒரு பக்கம் என்ற நிலை மாற்றப்பட்டு தற்போதைய பதிப்புகளில் தேவையான பக்கங்களை (டிராயிங் போர்டுகளை) இணைத்துக் கொள்ளவும் முடிகிறது.

அடோபி நிறுவனத்தின் தயாரிப்பான இதன் சிஎஸ்2 பதிப்பின் அடிப்படை செயல்பாட்டிற்கே நமது புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

இது பெரிய அளவில் புழக்கத்தில் இல்லை. தற்போதுதான் இதுபற்றிய விழிப்புணர்வு வரைகலைஞர்களிடையே ஏற்பட்டுள்ளது. இப்போது இதன் சிஎஸ்5 பதிப்பு புழக்கத்தில் உள்ளது. விரைவில் சிஎஸ்6 பதிப்பு வெளியிடப்படவுள்ளது.

அடோபி இல்லஸ்ட்ரேட்டர் பற்றி தமிழில் வெளியிடப்பட்ட முதல் புத்தகம் நமது பயிலகம் வெளியிட்டுள்ள இந்தப் புத்தகமேயாகும்

இந்த புத்தகத்தில் முதன்மைப்பகுதியான 182 பக்கங்கள் உள்ளிட்ட மொத்தம் 192 பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் அளவு டெமி 1/8 (உயரம் : 21.5 செமீ; அகலம் : 14 செமீ) ஆகும்

ஐஎஸ்பிஎன் : 978-81-908318-3-3